

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு "மகத்தான தலைவர் கலைஞர் என்ற தலைப்பில் மாணவர்களுக்கான கருத்தரங்கம் திருச்செங்கோட்டில் நடைபெற்றது. கருத்தரங்கில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி., நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கே.எஸ். மூர்த்தி, மாநில மாணவர் அணி செயலாளர் ஈரோடு வீரமணி ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கருத்தரங்கில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆர். சுரேஷ்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன், திருச்செங்கோடு மேற்கு நகர செயலாளர் நடேசன், கிழக்கு நகர செயலாளர் கார்த்திகேயன், நகர்மன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு மற்றும் மாணவர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### ஆர்.சுரேஷ்குமார் தலைமை! பாலசுப்பிரமணியன் வரவேற்புரை!

# திருச்செங்கோட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் கருத்தரங்கம்!

## திருச்சி சிவா எம்.பி. – கே.எஸ். மூர்த்தி – ஈரோடு வீரமணி ஜெயக்குமார் பங்கேற்பு!

நாமக்கல், ஜூன் 30 - நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு "மகத்தான தலைவர் கலைஞர்" என்ற தலைப்பில் மாணவர்களுக்கான கருத்தரங்கம் திருச்செங்கோட்டில் நடைபெற்றது.

மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆர். சுரேஷ்குமார் தலைமை வகித்தார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். திருச்செங்கோடு மேற்கு நகர செயலாளர் நடேசன், கிழக்கு நகர செயலாளர் கார்த்திகேயன், நகர் மன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்தரங்கில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி., நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கே.எஸ். மூர்த்தி, மாநில மாணவர் அணி செயலாளர் திருமதி ஈரோடு வீரமணி ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

கருத்தரங்கில் பேசிய திருச்சி சிவா எம்.பி., அண்ணா வகுத்த இருமொழிக் கொள்கை, மாநில உரிமைகள், புதிய கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு உள்ளிட்ட கொள்கைகளை தற்போதைய ஆட்சியும் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்தியாவில் 2035ஆம் ஆண்டுக்குள் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை 50 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட் டுள்ள நிலையில்,தி.மு.க. ஆட்சியிலேயே தமிழ்நாட்டில் அந்த எண்ணிக்கை 51 சதவீதத்தை எட்டியதாக கூறினார்.

மேலும், சமூகநீதி மற்றும் இடஒதுக்கீட்டு கொள்கையால் அனைத்து சமூகத்தினருக்கும் உயர்கல்வி மற்றும் அரசு பணிகளில் வாய்ப்புகிடைத்துள்ளதாக குறிப்பிட்ட அவர், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் திராவிட இயக்கமே காரணம் என்றார். ஆட்சி மாறியது ஆதங்கம் அல்ல; அரசு இயந்திரம் துருப்பிடிக்காமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அண்ணாவின் சிந்தனையே முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

"நாம் எதையும் இழக்கவில்லை. ஒன்றரை லட்சம் கோடி வாக்காளர்கள் நமக்கு வாக்களித்துள்ளனர். இது ஒரு இடைவேளை மட்டுமே. மீண்டும் ஆட்சிக்கு வருவோம். தமிழ்நாட்டில் நம்மைத் தவிர்த்து யாரும் ஆட்சிக்கு வர முடியாது. இதுகுறித்து யாரும் கவலைப்படத் தேவையில்லை" என்று தொண்டர்களுக்கு அவர் நம்பிக்கை அளித்தார்.

கருத்தரங்கில் பேசிய மாநில மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார், திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதால் தமிழ்நாட்டில் பெண்கள் அதிகளவில் பணிக்குச் செல்வதாக மத்திய அரசின் அறிக்கையே தெரிவிப்பதாக கூறினார். தற்போதைய த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக குற்றம் சாட்டிய அவர், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களை பரப்பி மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாகவும் விமர்சித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர்கள் தங்கவேல், தாமரைச்செல்வன், அருண்குமார், நகர மற்றும் ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள், மாணவர் அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், மாணவர் அணியைச் சேர்ந்த 1,500க்கும் மேற்பட்டோர் கருத்தரங்கில் பங்கேற்றனர். இறுதியாக மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் நானா நாணி கார்த்தி நன்றி கூறினார்

# பெட்ரோல், டீசல் விற்பனை - விநியோகத்திற்கு விதிக்கப்பட்ட தற்காலிகக் கட்டுப்பாடுகளை ஒன்றிய அரசு திரும்பப் பெற்றது!

புதுடெல்லி, ஜூன் 30 ஒன்றிய பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் பெட்ரோல், அதிவேக டீசல் விற்பனை மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக விதிக்கப்பட்ட தற்காலிக ஒழுங்குமுறை நடவடிக்கைகளை ஒன்றிய அரசு திரும்பப் பெற்றுள்ளது. ஒன்றிய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இந்த நடவடிக்கையானது ஜூலை 1, 2026 முதல் அமலுக்கு வருகிறது.

மேற்காசிய நெருக்கடியால் ஏற்பட்ட விநியோகத் தடைகளின் போது, சர்வதேச எரிபொருள் விலை உயர்வில் இருந்து சில்லறை வர்த்தக நுகர்வோரைப் பாதுகாக்கும் வகையில் பெட்ரோல், டீசல் விலையை ஒன்றிய அரசு நிலையாக வைத்திருந்தது. இதனால் சில்லறை விலைக்கும், மொத்த நுகர்வோர் விலைக்கும் இடையே பெரும் வித்தியாசம் ஏற்பட்டது. இதன் காரணமாக சில தொழில்துறையினரும், வணிக நுகர்வோரும் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் எரிபொருளை வாங்கத் தொடங்கினர். இது எரிபொருள் பதுக்கல், கள்ளச்சந்தை போன்றவற்றுக்கு வழிவகுத்து, விநியோகத்தைப் பாதித்தது.

இத்தகைய சூழ்நிலையைச் சீரமைக்க, கடந்த ஜூன் 12, 2026 அன்று தற்காலிக ஒழுங்குமுறை நடவடிக்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் மூலம் ஒரு வாடிக்கையாளர் அல்லது வாகனத்திற்கு நாளொன்றுக்கு அதிகபட்சமாக 200 லிட்டர் ஸ்பீடு டீசல் மட்டுமே வழங்கக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. தொழில்துறை நுகர்வோர் சில்லறை விற்பனை நிலையங்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட நுகர்வோர் பம்புகள் மூலம் எரிபொருளைப் பெற அறிவுறுத்தப்பட்டது.

தற்போது நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின் விநியோகச் சூழல் குறித்து ஆய்வு செய்த ஒன்றிய அரசு, இந்தத் தற்காலிகக் கட்டுப்பாடுகள் இனி தேவையில்லை என முடிவு செய்துள்ளது. விநியோக நிலைமை சீரடைந்துள்ளதால், ஜூன் 12, 2026 தேதியிட்ட உத்தரவு ஜூலை 1, 2026 முதல் திரும்பப் பெறப்படுகிறது. இது விநியோகச் சூழலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், விநியோக நடைமுறைகள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதையும் பிரதிபலிக்கிறது.

### கேபிள் சரவணன் முன்னிலை!

# தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், ஜூன் 30 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக சேலம் மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் ஜான்சன் பேட்டையில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது .

இந்த நிகழ்ச்சிக்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் கேபிள் சரவணன் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆர். ராஜேந்திரன் தலைமை தாங்கி தூய்மைப் பணியாளர்கள் 200 பேருக்கு பேண்ட் - சட்டை மற்றும் சேலைகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது,

தமிழகத்தில் அனைத்து மக்களும் சமம் என்ற நிலைமையை கொண்டு வந்தவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஏழை மக்கள் வாழ்வு மேம்பட அயராது உழைத்தவர். அவரது வழியில் கடந்த 5 ஆண்டு காலம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவலர்களும் முதலமைச்சராக இருந்து சிறப்பான ஆட்சி நடத்தி பாராட்டு பெற்றார். மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம் உள்பட எண்ணற்ற திட்டங்களை தந்தவர். மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 2000 ஆக உயர்த்தப்பட்டிருக்கும். இல்லத்தரசி கூப்பன் 8000 வழங்கப்பட்டிருக்கும்.

ஆட்சிக்கு வராவிட்டாலும் தி.மு.க. தலைவரின் அறிவுறுத்தல்படி எப்போதும் உங்களுக்கு உறுதுணையாக நாங்கள் இருப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ரகுபதி, துணைச் செயலாளர் கணேசன் , பகுதி செயலாளர்கள் சார்ந்த மூர்த்தி, சரவணன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் சோளம் பள்ளம் கார்த்தி, ரவி, மாநகர துணை அமைப்பாளர்கள் சிவராஜ், சுகைல் ரகுமான், வெங்கடேஷ் மற்றும் வார்டு செயலாளர்கள் ஜெயசீலன், சிவக்குமார் மற்றும் பகுதி, வார்டு இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

### இந்தியாவில் உட்கட்டமைப்பு முதலீட்டை விரைவுபடுத்தவும்,

# நிறுவன ரீதியான மூலதனத்தை ஈர்க்கவும் தேசிய முதலீடு - உட்கட்டமைப்பு நிதியத்தில் கூடுதலாக ரூ. 30,000 கோடி முதலீடு!

## ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்!

புதுடெல்லி, ஜூன் 30 உட்கட்டமைப்பு மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிற துறைகளில் இந்தியாவின் முதலீட்டு அர்ப்பணிப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதியத்தின் (என்ஐஐஎஃப்) புதிய மற்றும் வரவிருக்கும் நிதியங்களுக்கு, ஒன்றிய அரசு கூடுதலாக ரூ. 30,000 கோடி முதலீடு செய்ய பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவை கடந்த வாரம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம், என்ஐஐஎஃப்க்கான இந்திய அரசின் மொத்த முதலீட்டு உறுதிப்பாடு ரூ. 60,000 கோடியாக உயர்ந்துள்ளது.

தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதியம் என்பது இந்தியாவின் இறையாண்மைக் குட்பட்ட நிதியாகும். இது தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியம் லிமிடெட் (NIIFL) நிறுவனத்தால் தொழில்முறையாக நடத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. என்ஐஐஎஃப்ல் ஒன்றிய அரசு 49% பங்குதாரராக உள்ளது. மேலும், இது தற்போது தனது நிதிகள் மற்றும் முதலீட்டு உத்திகள் முழுவதும் சுமார் ரூ. 40,000 கோடி மூலதன உறுதிப்பாடுகளை நிர்வகித்து வருகிறது. என்ஐஐஎஃப், பெரிய முதலீட்டுத் தொகுப்பு வெளியேற்றங்கள் மூலம் முதலீட்டாளர்களுக்கு சுமார் ரூ. 12,000 கோடியைத் திரும்ப அளித்து, மூலதனப் பயன்பாடு மற்றும் வசூலில் ஒரு வலுவான சாதனைப் பதிவை வெளிப்படுத்தியுள்ளது.

அடிப்படைச் சொத்துகள் மற்றும் முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மூலம், பொருளாதாரத்தில் ஒரு ஊக்கமளிக்கும் தாக்கத்தை தற்போதைய அரசு ஒதுக்கீடு ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, உயர்தர உள்கட்டமைப்பு வசதிகளுடன் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முக்கியத் துறைகளின் வளர்ச்சியும் சாத்தியமாகும். இது தன்னிறைவுக்கு வழிவகுப்பதுடன், 2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நாட்டின் பயணத்திற்கும் வலிமை சேர்க்கும்.

### போதைப் பொருள்: அமைச்சர் சரத்குமாரை கண்டித்து

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக மாணவர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## ஆ.கலைச்செல்வன் தலைமையில்!

புதுக்கோட்டை ஜூன் 30- மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டி.சரத்குமார் அவர்கள் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அறந்தாங்கி கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் தலைமை வகித்தார். அறந்தாங்கி நகரச் செயலாளர் க.ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் பொது இடத்தில் போதை பொருளை உபயோகப்படுத்திய தமிழக அரசின் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியும், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் அறந்தாங்கி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம், ஒன்றியச் செயலாளர் சக்தி ராமசாமி, கே.பி.கே.டி.தங்கமணி, பொன் கணேசன், வே.பொன்துரை, பேரூர் கழக செயலாளர்கள் கே.சி. சிவக்குமார், ஆ. பழனிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா. ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஆவுடையூனுஸ், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எம்.ஜி (எ) ராமச்சந்திரன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ராஜபெரியண்ணன், ஜெயகிருஷ்ணராஜ், உதயசூரியா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் தமிழ்ராஜா, துரைராஜ், அன்பழகன், முகமது நலீம், அடைக்கலராஜா, சின்னையா, ஷாஜகான், அல்லி முத்து, தகவல் தொழில்நுட்ப அணி அறந்தாங்கி தொகுதி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேலன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பிரபுராமன், அகிலன், நகர இளைஞரணி அமைப்பாளர் சேக், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜாராம், விக்னேஸ்வரன், அய்யப்பன், நகர,ஒன்றிய நிர்வாகிகள் ராமசாமி, சுப்பிரமணியன், வீரப்பன், கணேசன், பாலசுப்ரமணியன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் வீராச்சாமி, அக்பர் அலி, ராகேஷ், சரத்,சந்திரசேகர், அறந்தாங்கி நகர அமைப்பாளர் அசோக்,தகவல் தொழில்நுட்ப அணி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் நைனா முகமது, கார்த்தி உள்ளிட்டோரை அனுமதி இல்லாமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக போலீசார் கைது செய்தனர். பின்னர் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4, 38வது வட்டம் ஆர்.கே.நகர் ஆரம்ப சுகாதார மையத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் 10க்கு மேற்பட்ட இடங்களில் 38வது வட்டத்தின் முகாம் அமைத்து 5 வயது குழந்தைகளுக்கு துவக்கி வைக்கப்பட்டது. உடன் உதவி மண்டல மருத்துவ அதிகாரி மாலினி, சுகாதாரத்துறை ஆய்வாளர் ஊழியர்கள் கழக தோழர்கள் எஸ்.கிருஷ்ணன், ப. தாமோதரன், ப.தேவராஜ்,எஸ். கமரூதின் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேற்கு பகுதி 3 வது வட்ட கழகத்தின் பொருளாளர் சகோதரர் எம்.ராஜா – எஸ்.ஷாலினி இணையரின் திருமண வரவேற்பு எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் அமைந்துள்ள சமுதாய நல மண்டபத்தில் நடைபெற்ற நகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ.தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர் உடன் பகுதி இளைஞர் அணி ரீ சரவணன், மணலி ஸ்டாலின், மு.மனோஜ் (எ) தமிழ்மாறன், டி.கே.சிவசூர்யா, ஆர்.சி.எம்.சதிஷ், புழல் சித்தர், ஹரீஷ், பிரகதீஷ், ஐசக் மற்றும் கழகத்தின் வாழ்த்தினர்.